12.09.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண். 204 /2018 ) திரு.சாமிராஜ்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>

1) ஜவஹர் விவாசய சங்கம் என்பது பதிவு அலுவலகத்தில் சட்டப்படியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததல் அந்த சங்கம் செயல்படவில்லை என்று குறிப்பு எழுதி சங்கங்களின் பதிவாளரால் சங்கப் பெயரை முடித்துவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் சங்க உறுப்பினர்களால் சங்கம் கலைக்கப்பட்டதாக எந்த ஒரு குறிப்பும் சங்க பதிவாளருக்கு வழங்கப்படவில்லை என்றால்சரிதான். சங்க உறுப்பினர்கள் சேர்ந்து சங்கம் கலைக்கப்படுவதற்கு முடிவு எடுக்கப்பட்டால் தான் சங்கத்தின் சொத்து குறித்து தீர்மானிக்கப்படும் என்றால் இல்லை சங்கத்தின் சொத்துக்களை பற்றி சங்கம் கலைக்கப்படுவதற்கு முடிவு செய்தால் தான் சொத்துக்களை பற்றி முடிவு செய்ய முடியும் என்றால் சரிதான். சங்கத்திற்கு என்று ரிக்கார்டுகளை 1973 ஆம் ஆண்டிலிருந்தே பராமரிக்கப்படவில்லை என்பதை சங்க உறுப்பினர்களிடமோ, பொறுப்பாளரிடம் கிரையத்திற்கு முன்பு விசாரணையும் செய்யவில்லை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளவிலலை என்றால் சரியல்ல சங்க ஆவணங்களை பற்றி விசாரணை செய்யும் போது நிலம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் முழுமையாக இருப்பது தெரியவந்தது. சங்கத்திற்கு பராமரிக்கப்பட்ட ஆவணங்கள் பற்றி என்ன தெரியவந்தது என்றால் தஸ்தாவேஜ்கள் எதுவும் இல்லை என்று தெரியவந்தது. சங்கம் பராமரிக்கவேண்டிய ஆவணங்கள் எதுவும் இல்லை என்பது பற்றி சங்க நிர்வாகிகளிடம் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும் படி நான் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சொத்தை பற்றி ஒப்பந்தம் போட்ட போதே தெரியுமா அல்லது கிரையம் வாங்கும் போது தெரியுமா என்றால் 1995 ல் விற்பதற்குஒப்பந்தம் போடப்பட்டு விற்காத விவரம் என்பது தெரியும். அந்த சம்பவம் நடைபெற்றது பற்றி எந்த தீர்மானமும் போடப்படவில்லை என்றால் சரிதான். சங்கத்தின் ஆரம்ப காலத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தார்கள் என்பது பற்றிய ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வாங்கவில்லை. ஆனால் எனது தந்தையின் மூலமாக யார் யார் உறுப்பினர்கள் என்ற விவரம் தெரியும். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டதற்கான தீர்மானம் என்றால் சரிதான்.

2) தீர்மானம் போட்டதற்கு கூட்டம் எப்போது கூட்டப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் வாங்கவில்லை. இறந்த உறுப்பினர்களுக்கு அவர்கள் வீட்டில் ஒரு நபரை உறுப்பினர்களாக ஆக்குவதற்கு அந்த வீட்டில் உள்ள நபர்கள் சம்மதம் தெரிவித்தற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் பி.வா.சா.ஆ.6ல் மேற்படி உறுப்பினர்களை சேர்ப்பதற்கு சங்கமும், குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து முடிவு செய்து இறந்த உறுப்பினரின் வீட்டிலிருந்து ஒரு உறுப்பினரை சேர்ப்பதற்கு இசைவு முறையில் சேர்க்கப்பட்டது. இந்த விவரம் பி.வா.சா.ஆ.6ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் இசைவு தெரிவித்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6ல் இறந்து போன கோட்டியப்பன் என்பவருக்கு பதிலாக அவரது மகன் பன்னீர்செல்வம் என்பவர் உறுப்பினராக நியமித்து ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று கண்டுள்ளது. அந்த கோட்டியப்பனுக்கு 2 ஆண் வாரிசுகளும், 2 பெண் வாரிசுகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். சாமிகண் என்பவருக்கு 2 ஆண் வாரிசுகள் 4 பெண் வாரிசுகள் இருக்கிறார்கள் ஆனால் பாஸ்கரன் என்பவரை மட்டும் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சங்கம் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் ஆறுமுகத்திற்கு 2 மகள்கள் ஒருவரை மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவில்பிள்ளை குமாரர் ஏசையாவுக்கு 2 வாரிசுகள் ஆனால் ஒரு வாரிசு சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்றொரு கோ.சாமிகண் என்பவருக்க 5 வாரிசுகள் என்றால் சரிதான். சண்முகவேல் என்பவருக்கு மகள்கள் 2பேர்கள் என்றால் சரிதான். செல்லையாவுககு பதிலாக எட்டுராஜ் சேர்க்கப்பட்டுள்ளது ஆனால் அவருக்கு 5 மகன்கள் என்றால் சரிதான். எட்டுராஜ் என்பவர் அவருக்கு கடைசி மகன் என்றால் ஆமாம். கடைசி மகனை சேர்ப்பதற்கும் மற்ற மூத்த மகன்கள் சம்மதம் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3) பி.வா.சா.ஆ.6 ஆவணம் முறையான அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.7 உறுப்பினர்கள் பட்டியல் என்று காட்டப்பட்டள்ள பட்டியலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணம் எதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்ற விவரமும் நான் கேட்டுக்கொள்ளவில்லை அவர்களும் சொல்லவில்லை அனால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் பட்டியல் மட்டும் கொடுத்தார்கள். எனது அப்பாவும்

கிராப்ட் ஆசிரியராக வேலைபார்த்து அரசு சம்பளம் பெற்று வந்தார் என்றால் சரிதான். முந்திய விசாரணையில் அரசு வேலை பார்ப்பவர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க முடியாது என்றுசாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தெரியவில்லை கிராமப்புறங்களில் அரசு வேலையில் இருப்பவர்களும் சங்க உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள். எனது தந்தை சங்க உறுப்பினராக இருந்த பின்னர் தான் அரசு வேலைக்கு சென்றார். கோட்டியப்பனுகது பதிலாக சேர்க்கப்பட்டுள்ள பன்னீர்செல்வம் அரசு வங்கியில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். அவர் எனது வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறார் என்றால் எனது தெருவில் வசித்து வந்தார். பன்னீர்செல்வம் பெயரை அவருக்கு தெரியாமலே எனது தூண்டுதலின் பேரில் சங்க உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள சந்திரராஜ் 1ம்வாதியாக உள்ளார் அவரின் உடன் பிறந்த சகோதரர் தான் மேற்சொன்ன கோட்டியப்பனுக்கு பதிலாக சேர்க்கப்பட்ட பன்னீர்செல்வம் என்றால் சரிதான். 1ம் வாதி சந்திரராஜை தான் அவர் பணியிலிருந்து பணி ஓய்வு பெற்றதால் சங்க உறுப்பினராக சேர்ப்பதற்கு குடும்ப உறுப்பினர்கள் இசைவு தெரிவித்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. தெரிந்த சங்கதிகளை மறைத்து இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோட்டியப்பன் என்பவர் தான் சங்கம் ஆரம்பித்தது முதல் இறக்கும் வரை அவருடைய பராமரிப்பில் தொடர்ந்து இருந்து வந்தது என்றால் தலைவராக இருந்து வந்தார் சங்கத்தின் ஆவணங்கள் செயலாளர் திரு.மாடசாமி வசம் தான் இருந்து வந்தது.

4) இந்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது எனது அப்பா சொல்லி தெரியுமா என்றால் சரிதான். சங்க ஆவணங்கள் கோட்டியப்பன் வசம் இருந்து வந்து 1995 ஆம் ஆண்டு அவர் சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் போடும் போது வேறுநபர் வசம் ஒப்படைத்த விவரத்தை நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் தவறான நபர்களிடம் சென்ற விவரத்தை பயன்படுத்தி ஆவணம் எனது தந்தை வசம் வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.12 வரையிலான தீர்மான ஆவணங்கள் அனைத்திலும் போடப்பட்டுள்ள கையெழுத்துக்கள் எல்லாம் அதே வரிசை முறையில் உள்ளது என்றால் சரிதான். ஆகையால் பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் பின் யோசனையிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள்

என்றால் சரியல்ல. சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகிறதுஎன்பதற்கு எந்தவிதமான விளம்பரம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அருகில் உள்ள நிலம் எங்களுடையது என்பதால் எங்களிடம் சொல்லி நாங்கள் கிரையம் பெற்றோம். வேறு நபர்கள் யாராவது கிரையம் கேட்டார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொத்தை ஏக்கர் எவ்வளவு என்று பேசி வாங்கப்பட்டது என்றால் ஏக்கருக்கு 11,000/- என்று வாங்கினோம். ஆனால் 1995 ஆம் ஆண்டு தாவாச்சொத்தை போடப்ட்ட ஒப்பந்த ஆவணத்தில் ரூ.12,000/- என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.வேறு யாரும் விலைக்கு வாங்க முன் வராததால் சங்க உறுப்பினர்களுடைய மகன்கள் படிப்புக்காக குறைத்து விற்பனை செய்தார்கள். நான் கிரையம் செய்ததது 1995 ஆம்ஆண்டு பின்னிட்டு 12 ஆண்டுகள் கழித்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 12 ஆண்டுகள் காலத்திற்குள் ஊரில் உள்ள சொத்து மதிப்பு உயர்ந்து தான் காணப்படுகிறது என்றால் தெரியாது. சங்கத்து சொத்தாக உள்ளதால் கிரையம் முடிப்பதால் பிரச்சனை வரும் என்று தெரிந்து கொண்டு அடிமாட்டு விலைக்கு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிரச்சனைகளை பொறுத்து கூட்டுறவில் வேலைபார்ததவர் தான் பிரச்சனைகளை சமாளித்துக்கொள்வேன் என்று எனது மனைவி பெயரில் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

5) கிரையம் வாங்கிய விவரத்தை நான் வேலைபார்த்த துறைக்கும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பெயருக்கு வாங்கியதால் நான் தெரிவிக்கவில்லை. தகவல் உரிமைச்சட்டத்தின் கீழ் கனகராஜ், சந்திரராஜ் தகவல் கோரியதால் நான் ஆட்சேபனை தெரிவித்தால் அவர்களுக்கு தகவல் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சங்கச்சொத்துக்களை கிரையம் பெற்றதாக தகவல் கொடுத்திருந்தால் நான் பணிபுரிந்த துறையிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டியிருக்கும் என்றால் சரியல்ல. சங்கத்தின் சொத்தை கிரையம் வாங்கியது தவறானது என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற சொத்தில் ஒரு பகுதியை 5 ம்பிரதிவாதிக்கு 2017 ல் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 5 ம்பிரதிவாதி கிரையம் பெற்று அவர்பொருட்களை இறக்கியதால் தான் வாதிகள் வழக்கு தாக்கல் செய்ய நேரிட்டது என்றால்சரியல்ல. 5 ம்பிரதிவாதிக்கு 1,2 பிரதிவாதிகள் கொடுத்த கிரையமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. கிரையத்தின் மூலம் பெறப்பட்டப ட்டாக்களும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதன் பேரில் பட்டா மற்றும் தீர்வை

ரசீதுகள் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து சங்கத்தின் ஆவணங்களை பராமரித்து வந்து வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் வழக்கில் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
12.09.2025.